**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**19 |
| Name | : | **மஞ்சுளா** |
| Husband Name | : | **செந்தமிழ்செல்வன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 45/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். அ.சா.15 முதல் அ.சா.18 வரை தெரியும். எதிரி எனது பக்கத்து வீட்டில் வசித்து வந்தார். எதிரி ஏற்கெனவே எனக்கு இரண்டு முறை லோன் வாங்கிகொடுத்துள்ளார். இவ்வழக்கின் புகார்தாரர் சத்தியா என்பவரின் மூலமாக எதிரி எனக்கு பழக்கமானார். எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காகவும், தனது தங்கையின் மருத்துவ செலவிற்காகவும் லோன் வாங்கிதருமாறு என்னிடம் கூறியதால் ரூ.2,40,000/-ஐ மண்ணச்சநல்லூரில் உள்ள Equtuos என்ற நிதிநிறுவனத்திடமிருந்து ரூ.40,000/-மும், காரையிலுள்ள துவாரா என்ற நிதிநிறுவனத்திடமிருந்து ரூ.70,000/-மும், செட்டிக்குளம் யூனியன் வங்கியிலிருந்து ரூ.90,000/-மும், Nabins என்ற நிதிநிறுவனத்திடமிருந்து ரூ.40,000/- கடனாக பெற்றுக்கொடுத்தேன்.

மேற்படி தவணை தொகைகளை அவரே செலுத்திவிடுவதாக கூறியதன்பேரில் கடன் பெற்றுக்கொடுத்தேன். கடனுக்கான சில தவணை தொகைகளை செலுத்திவிட்டு எதிரி தலைமறைவாகிவிட்டார். நிதி நிறுவன ஊழியர்கள் என்னிடம் வந்து தவணை தொகைகளை திரும்ப செலுத்துமாறு கேட்டபோது எதிரியை அவரது வீட்டில் சென்று பார்த்தபோது அவர் அங்கு இல்லை. மேலும் எதிரி இதுபோல் பலரிடம் கடன் வாங்கி ஏமாற்றியதாக தெரியவந்தது. என்னை போல் பாதிக்கப்பட்ட அ.சா.1 சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். நிதிநிறுவனத்தின் அசல் கடன் அட்டைகள் எதிரியிடம் உள்ளது. **காரையிலுள்ள துவாரா நிதி நிறுவனத்தின் கடன் அட்டையின் நகல் அ.சா.ஆ.45 ஆகவும், Equitas நிதி நிறுவனத்தின் கடன்அட்டையின் நகல் அ.சா.ஆ. 46 ஆகவும், 29.07.2023 தேதி என்னுடைய Gpay விலிருந்து வசந்திக்க ரூ-20,000/- மற்றும் ரூ.20,000/- மொத்தம் ரூ.40,000/- அனுப்பியதற்கான Statement நகல் அ.சா.ஆ.47 ஆகவும், செட்டிக்குளத்திலுள்ள Union Bank of India வங்கி கணக்கின் 29.07.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.48 ஆகவும், செட்டிக்குளத்திலுள்ள Union Bank of India வங்கி கணக்கின் 01.07.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் நகல் அ.சா.ஆ.49 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி வசந்தியும் நானும் ஒரே ஊர். வசந்தியை எனக்கு 4 வருடமாக தெரியும். எதிரி ஏற்கெனவே எனக்கு லோன் வாங்கிகொடுத்துள்ளாரா என்றால் இல்லை. இதுதான் முதல்முறை. எதிரிக்கு நான் நான்கு லோன் வாங்கிகொடுத்துள்ளேன். ஒரு லோன் தொகையில் ஐந்து தவணைகளும், Nabins நிதி நிறுவனத்தில் வாங்கிய தொகையில் ஏழு தவணைகள் கட்டியுள்ளார். Equitas நிறுவனத்தில் வாங்கிய கடனில் ஐந்து தவணைகளை செலுத்தியுள்ளார். துவாராவில்ஒரு தவணை செலுத்தியுள்ளார். யூனியன் பேங்க் ஆப் இந்தியா செட்டிக்குளம் கிளையில் மகளிர் சுயஉதவி குழுவில்கடன் வாங்கிய வகையில்

ரூ.90,000/- வாங்கிகொடுத்த வகையில் எத்தனை தொகை கட்டியுள்ளார்ள ன்று தெரியாது. எதிரி சரியாகத்தான் தவணைகளை கட்டிவந்தார் என்றாலும், நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.